




# வாசிங்டனில் புறநானூறு பன்னாட்டு மாநாடு

செப்டம்பர் 11,2013 IST Comments




View More Photo

வாசிங்டன்: வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையுடன் இணைந்து "புறநானூறு:பன்னாட்டு மாநாடு" ஒன்றை நடத்தியது. வாசிங்டன் வட்டாரத்தில், மேரிலாந்து மாநிலத்தில் சில்வர் ஸ்ப்ரிங் என்ற ஊரில் இரண்டு நாட்களாக நடந்த இந்த மாநாடு, முழுக்க முழுக்க புறநானூற்றை அலசி, ஆராய்ந்து, ரசித்து, விவாதிக்கும் ஓர் அரிய வாய்ப்பாக அனைவருக்கும் அமைந்தது. அமெரிக்காவின் பல பகுதிகளிலிருந்தும், கனடாவிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் சுமார் 350-க்கும் மேற்பட்டவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் மருதநாயகம், திரைப்பாடலாசிரியர் கவிஞர் அறிவுமதி, தமிழிலக்கிய ஆய்வாளர் முருகரத்தினம், சங்க இலக்கிய மொழி பெயர்ப்பாளர் வைதேகி ஹெர்பர்ட், பண்டைத் தமிழ் இலக்கிய ஆய்வாளர் அறிவுநம்பி, கவிமாமணி. இலந்தை இராமசாமி ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்றனர்.

தொடக்க நிகழ்வான புறநானூற்றுப் பாடல் ஒப்புவிப்பு நிகழ்ச்சியில் 6லிருந்து 12 வயதுக்குள்ளான சிறுவர் சிறுமிகள் ஒவ்வொருவரும் சுமார் பத்துப் புறநானூற்றுப் பாடல்களை ஒப்புவித்தனர். பாடலைச் சொல்லி அதற்கு விளக்கம் கொடுத்தல், பண்ணிசைக்கும் போட்டி, தமிழிசையில் புறநானூறு போன்ற நிகழ்வுகளில் மாணவ-மணவியர்கள் புறநானூற்றுப் பாடல்களைக் கர்நாடக இசையில் பாடினர். இவர்களுக்கான விநாடி-வினா நிகழ்ச்சியிலும் புறநானூறு பற்றிய இவர்களின் ஆழம் தெரிந்தது. இத்தனைக்கும், இவர்கள் பிறந்து வளர்ந்து படிப்பது அமெரிக்காவில்! இவர்கள்அதிகமாகப் பேசும் மொழி ஆங்கிலம்!

புறநானூறு குறித்த கட்டுரை வாசிப்புகளும், மேடைப்பேச்சுக்களும் எல்லோரையும் கவனிக்க வைத்தன. இன்றைய அரசியலுக்கும் பொருந்தும் அரசியல் சிந்தனைகள் –நீர் வளத்தைப் பெருக்குதல், எளிமையாக வாழ்தல், மக்களிடம் வரி வாங்குவதில் கடினம் கொள்ளாமை போன்றன- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் காணக் கிடைப்பதை, மேகலா இராமமூர்த்தி தன் பேச்சில் எடுத்துக்காட்டினார்.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய புறநானூற்றை இப்போது கொண்டாட வேண்டிய அவசியம் என்ன?" என்ற கேள்விக்கு, முனைவர்.மருதநாயகம் தன் பேச்சில் பதிலளிக்கையில், "புறநானூறுதான் தூதுப்பாடல்களுக்கும், கையறு நிலைப்பாடல்களுக்கும் (இரங்கற்பாக்கள்), பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கும், மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சிக்கும், ஆண்டாளின் திருப்பாவைக்கும் ஆதாரமாக, தூண்டுகோலாக அமைந்தது. புறநானூற்றுச் சமுதாயம் முற்றிலும் ஏற்றத் தாழ்வுகள் அல்லாத ஓர் இலட்சியச் சமுதாயம் என்று சொல்ல முடியாது;ஆனால் அக்கால கிரேக்க, ரோம மற்றும் யூத சமுதாயங்களுடன் ஒப்பிட்டால் ஏற்றத் தாழ்வுகள் புறநானூற்றுச் சமுதாயத்தில் மிகக் குறைவு. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" போன்ற உலகத்தாரை நட்பு பாராட்டும் ஓர் உயர்ந்த, எளிய, பரந்த மனப்பாங்கை வேறு எந்த உலக இலக்கியங்களிலும் காணமுடிவதில்லை" என்று ஜார்ஜ் ஹார்ட் (கலி:.போர்னியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப்பேராசிரியர்) குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டினார்..

இந்த நிகழ்ச்சியை பீட்டர் யெரேணிமூஸ், குழந்தைவேல் ராமசாமி வடிவமைத்திருந்தனர்.

மாநாட்டு நாளுக்கு முன்பாகவே புறநானூற்றைப் பல கோணங்களில் ஆராயும் ஆய்வுக்கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளுக்கு முதல் பரிசாக 1000 டாலர்களும், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளாக முறையே 500, 250 டாலர்களும் வழங்கப்பட்டன. புறநானூற்றுக் காட்சிகளை ஓவியமாக வடிக்கும் 'ஓவியப் போட்டி"யும் நடந்தது.மாநாட்டுக்கு வண்ணம் தெளித்தாற்போல், "முத்தமிழ் முழக்கம்", "வீரம்" மற்றும் "சிவகாமியின் சபதம்" என்ற நாட்டிய நாடகங்கள் அரங்கேறின. மாநாட்டில் பாரதி மலர்ச்செல்வன் பாடிய 11 புறநானூற்றுப் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு வெளியிடப்பட்டது. புறநானூற்றை ஆராயும் சிறப்புக்கட்டுரைகள் அடங்கிய 'மாநாட்டு மலரு'ம் வெளியிடப்பட்டது..முனைவர்.பிரபாகரன் மற்றும் .வைதேகி ஹெர்பெர்ட் எழுதிய புறநானூற்று விளக்கவுரைப் புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ஜான் பெனடிக்ட் தனதுஉரையில், புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களை ஆவணப் படங்களாக தயாரிக்கவேண்டுமென்றும், தாய்த் தமிழகத்தில் மாணவர்கள் கண்டிப்பாகத் தமிழ் படிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார். மேரிலாந்து மாநில வெளியுறவுத்துறைத் துணைச் செயலாளர் முனைவர். ராசன்நடராசன், மாநில ஆளுநர் மார்ட்டின் ஓ'மாலியின் வாழ்த்துரையை வழங்கினார். தமிழ்ச் சங்கச் செயலாளர் கல்பனா மெய்யப்பன் நன்றி கூறினார்.

- வாஷிங்டனிலிருந்து ஜான் பெனக்டிக்ட்

Like 2 Send Tweet 0 0 SHARE

உங்கள் ஊர் செய்திகளை
இங்கே தெரிவியுங்கள்

Advertisement

தற்போதைய செய்தி

துபாயில் ப.சிதம்பரம் ஒரு பார்வை நூல்




Advertisement

சர்வதேச நகரங்களின் நேரம்




இன்றைய முக்கிய செய்திகள் மேலும்

## திருச்சியில் மழை:ரயில்கள் தாமதம்

திருச்சி: மணப்பாறையில் திருச்சி- மணப்பாறை ரோட்டில் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்தப்பணி சரியாக நடைபெறவில்லை என புகார் ...

செப்டம்பர் 25,2013 IST Comments

1 அண்ணாமலை பல்கலை இணைவேந்தர் யார்?